**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2017/2018 (ஆகஸ்ட் 2020)**

# PSS 4123 இலங்கையில் அரசியற் பிரச்சினைகள்
# Political Issues in Sri Lanka

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

*** விடைகள் நேர்த்தியாகவும் தெளிவாகவும் அமைதல் வேண்டும்.**

---

## பகுதி – I

01. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைத் தெளிவுபடுத்துக
    (அ) மோதல் என்பதன் பொருள் (10 புள்ளிகள்)
    (ஆ) மோதல் வகைப்பாடுகள் (10 புள்ளிகள்)
    (இ) மோதல் செயற்பாடுகள் (10 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றை விளக்குக.
    (அ) இலங்கையில் நீதித்துறை சுயாதீனம் (10 புள்ளிகள்)
    (ஆ) அரசியலமைப்பிற்கான 19 வது யாப்புத்திருத்தம் (10 புள்ளிகள்)

03. இலங்கையில் அரசியற் கட்சிமுறை எதிர்நோக்கும் பிரச்சினைகளை பின்வருவனவற்றுள் யாதாயினும் இரு தலைப்புக்களில் விளக்குக.
    (அ) கட்சி முறையும் கூட்டணி அரசியலும் (10 புள்ளிகள்)
    (ஆ) இனத்துவக் கட்சிகள் (10 புள்ளிகள்)
    (இ) இருகட்சி ஆதிக்க முறை (10 புள்ளிகள்)
    (ஈ) இடது சாரிக்கட்சிகள் (10 புள்ளிகள்)

## பகுதி – II

04. "இலங்கைத் தேசிய காங்கிரஸ் (1919) பிளவுற்றமையே சிங்கள – தமிழ் முரண்பாட்டின் தோற்றுவாயாகும்." ஏற்பீரா? உமது விடையைத் தெளிவுபடுத்துக.
    (20 புள்ளிகள்)

05. "இலங்கை அரசியலில் மதத்தின் செல்வாக்கு அதீதமானது." பகுப்பாய்வு செய்க.
    (20 புள்ளிகள்)

06. இலங்கையின் இனமுரண்பாட்டு தீர்வு முயற்சியில் நோர்வே அல்லது இந்தியாவின் வகிபாகத்தினை பகுப்பாய்வு முறையில் வெளிப்படுத்துக.
    (20 புள்ளிகள்)

07. "சிவில் நிருவாகத்தில் இராணுவத்தின் பங்கு மகத்தானதும் செயற்றிறன் மிக்கதுமாகும்." இவ்விவாதத்துடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடையை பரிசீலிக்குக.
    (20 புள்ளிகள்)

*****